# கற்பகம் KATPAKAM

திங்கள் இதழ்

விலை ரூபா 10/-

மலர்-04 ஜூலை-2011 இதழ்-45


## குறளமுதம்-45

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தவரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

**அதிகாரம்-5 -அறத்துப்பால்-இல்லறவியல்**

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

இல்வாழ்க்கை அன்பும் அறமும் உடையதாக விளங்குமானால் அவ்வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவேயாகும்.

# சமாசம் ஏற்பாடு செய்துள்ள 89வது கூட்டுறவு தினவிழா!

89வது சர்வதேச கூட்டுறவு தினவிழாவை வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வழமை போல இம்முறையும் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

கூட்டுறவின் மகத்துவத்தை எடுத்துக்கூறும் வகையில் அங்கத்தவர்கள், பணியாளர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள், சங்கங்களால் நடத்தப்பட்டுவரும் முன்பள்ளிகளின் மாணவர்கள் ஆகியோரிடையே பல்வேறு போட்டிகளை நடத்தவுள்ளது.

அங்கத்தவர்கள், பணியாள்ர்கள், மகளிர்குழு உறுப்பினர்களுக்கிடையே பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகள் எதிர்வரும் 5ம் திகதி காலை 9.00 மணிமுதல் சமாச மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளி மாணவர்களுக்கிடையேயான திருக்குறள் மனப்போட்டி, குழு நடனப் போட்டிகள் 6ம் திகதி காலை 9.00 மணிமுதல் நடைபெறவுள்ளது.

மற்றும் சிறந்த சங்கங்களின் தெரிவு, சிறந்த கொத்தணிகளின் தெரிவு என்பவற்றுக்கான போட்டிகள் 10ம் திகதிமுதல் 15ம் திகதி வரை

(8ம்பக்கம் பார்க்க)

### சர்வதேச கூட்டுறவு தின வாழ்த்துக்கள்!



கூட்டுறவாளர்கள் மற்றும் கற்பகம் வாசகர்கள் அனைவருக்கும் 'கற்பகத்தின்' கூட்டுறவுதின வாழ்த்துக்கள்!

## கோண்டாவில் பனை தென்னை சங்கத்தில் கூட்டுறவுதின விழா!

கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் 89வது சர்வதேச கூட்டுறவுதின விழாவை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளது.

உறுப்பினர்கள், பணியாளர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள் முன்பள்ளி ஆசிரியர்களுக்கிடையேயான பேச்சு, கட்டுரை, கவிதை போட்டிகளையும்,

(8ம்பக்கம் பார்க்க)

## ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பில் ஆணையாளர் சுற்றுநிருபம்!



கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் கூட்டுறவுப் பணியாளர்கள் மீதான ஒழுக்காற்று விசாரணைகள் தொடர்பாக யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் சகல கூட்டுறவு நிறுவனங்களுக்கும் சுற்று நிருபம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

1972ம் ஆண்டு மார்ச் மாதம் 18ம் திகதிக்கு முன் கூட்டுறவுப் பணியாளர்கள் சம்பந்தமான ஒழுக்காற்று நடவடிக்கைகள் யாவும் தொழில் பிணக்குச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய முடிவு செய்யப்பட்டு வந்தன. கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுச் சட்டம் துணை விதிகளின் நடைமுறைக்கு அமைய கூட்டுறவுப் பணியாளர்களின் நியமனம், இடைநீக்கம், ஒழுக்காற்று விசாரணை என்பன 1972ம் ஆண்டு மார்ச் 18ம் திகதிக்கு பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது என அவர் இச்சுற்று நிருபத்தில் தெரிவித்துள்ளார்.

(சுற்று நிருபம் 3ம் பக்கத்தில் முழுமையாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது)

## பனை தென்னை நிறுவனங்களுக்கு புதிய கூ. அ. அலுவலர் நியமனம்!

யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலராக கடமையாற்றும் ஆர்.பாலச்சந்திரன் 01-08-2011ல் இருந்து பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளுக்கு பொறுப்பாக கூ.அ.உதவி ஆணையாளர் திரு. வீ.கே. அருந்தவநாதனால் நியமிக்கப்பட்டுள்ளார்.

சிந்தனைத்துளி
"இதுவரையும் மனிதகுலம் காணாத மேம்பட்ட சமுதாயத்தை உருவாக்குவதே கூட்டுறவின் இலட்சியம்" -றொபேட் ஓவன்-

## கற்பகக்கரு

### 89வது கூட்டுறவு தினம்

வருடந்தோறும் ஜூலை மாதத்தின் முதல்வரும் சனிக்கிழமை கூட்டுறவாளர்களினால் கொண்டாடப் பட்டுவரும் புனிதமான தினமே கூட்டுறவாளர் தினமாகும்.

இவ்வாண்டு 89வது சர்வதேச கூட்டுறவுதினம் உலகில் வாழுகின்ற 80 கோடிக்கு மேற்பட்ட கூட்டுறவாளர்களினால் கொண்டாடப்படுகிறது.

சமூக பொருளாதார மேம்பாட்டுக்கென உதயமான கூட்டுறவு இயக்கம் சாதி, சமய, அரசியல், மொழி வேறுபாடுகளுக்கப்பாற்பட்டு நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் கோட்பாடுகளை தன்னகத்தே கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பே ஆகும்.

மதத்துக்கு ஒப்பான இப் புனிதமான இயக்கமானது கூட்டுறவாளர்கள் மத்தியில் நிலவுகின்ற பேதங்களை களைந்து, ஒற்றுமையை ஏற்படுத்தி அனைவரது ஒத்துழைப்புடனும் பலம்பொருந்திய பாரிய இயக்கமாக எதிர்காலத்தில் கட்டியெழுப்பப்படல் வேண்டும்.

வானவில்லை ஒத்த ஏழு வர்ண கூட்டுறவுக் கொடிகள் கிராமங்கள், நகரங்கள், பட்டினங்கள், மாநகரங்கள் தோறும் ஜூலை மாதம் முழுமையாக பட்டொளி வீசிப் பறக்கவிடப்பட்டு வணக்கத்துக்குரிய ஒரு தினமாக இத்தினத்தை கூட்டுறவாளர்கள் அனைவரும் கருதவேண்டும்.

இப்புனித தினத்தை பல்வேறு விதமான போட்டிகளுடன் கொண்டாடுகின்ற கூட்டுறவு நிறுவனங்கள் மக்கள் மத்தியில் ஏழு (7) கூட்டுறவுக் கொள்கைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள் போன்ற விழிப்புணர்வு செயற்பாடுகள் மூலம் மேலும் பல அங்கத்தவர்களை கூட்டுறவில் உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் கூட்டுறவு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அவர்களுக்கிடையே பேச்சு, கட்டுரை, கவிதை போட்டிகளை ஒவ்வொரு கூட்டுறவு நிறுவனங்களும் நடத்த முன்வர வேண்டும்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த வரையில் அவற்றின் பரிணாம வளர்ச்சி 40 ஆண்டுகளை எட்டியபோதும், சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு தொடர்ச்சியாக இச்சங்கங்கள் அங்கத்தவர்கள், பணியாளர்கள், மகளிர் உறுப்பினர்கள் மற்றும் முன்பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் போட்டிகளை நடத்தி அவர்களை கூட்டுறவு இயக்கத்தின் பால் ஈர்க்கக்கூடிய வகையில் ஏற்பாடுகளை செய்து வருவது உண்மையில் கூட்டுறவு இயக்கத்துக்கு பலம் சேர்க்கும் ஒரு வகையான செயற்பாடு என்றே கருத வேண்டும்.

இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் அங்கத்துவ சங்கங்களை ஊக்குவிக்கும் வகையில் சமாசம் வருடந்தோறும் சமாச மட்டத்தில் பல்வேறு போட்டிகளுடன் இவ்விழாவை கொண்டாடி வருவது கூட்டுறவு நிறுவனங்களுக்கு ஒரு முன்னுதாரணமான செயலாகும் என்பதை கற்பகம் சுட்டிக்காட்டுறது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"
-ஆசிரியர்-

### கூட்டுறவுச் சங்கங்களில்...... 4ம் பக்கத் தொடர்ச்சி

03. கூட்டுறவு வளவிலுள்ள பொருட்களை திருடல் அல்லது பணிகொள்வோரது வியாபாரத்திற்குத் தொடர்புடைய பொருட்கள் தொடர்பான நேர்மையீனம் அல்லது மோசடி.
04. ஒழுக்கக்கேடு தொடர்பான ஒரு குற்றவாளியாகக் காணப்படல்.
05. இலஞ்சம் அல்லது சட்ட விரோதமான கையூட்டுக்களை ஏற்றலும், கொடுத்தலும்.
06. தாபனத்தில் வேலை நேரத்தில் கலக அல்லது ஒழுங்கற்ற முறையில் நடத்தல்.
07. கடமையின்போது தூங்குதல் (காவலாளிகள் அல்லது சேம ஆளணியினர் விடயத்தில் கடமை நேரத்தில் தலத்தில் இல்லாதொழிதல்)
08. வேலை நேரத்தில் மது மயக்கத்தில் இருத்தல்.
09. பணிகொள்வோரின் வளவிலுள்ள பாதுகாப்புச் சாதனங்களுடன் தேவையற்றுத் தலையிடுதல்.
10. அத்தகைய சங்கத்தின் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட உண்மையான தகவல்களைக் கொடுக்கத் தவறுதல்.
11. பொய்க் கணக்குகள்.
12. மோசடிகளை மறைத்தல்.
13. குற்றவியல் நம்பிக்கைத் துரோகம்
விலைக்கட்டுப்பாட்டு அல்லது சங்கத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தத்தகு நடத்தை, உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டங்களின்கீழ் அல்லது பங்கீட்டுப் பொருட்களின் திட்டங்களுக்குக்கீழ் அமைந்த விதிகள் அல்லது ஒழுங்கு விதிகள் அல்லது கட்டளைகளை மீறல் அல்லது அத்தகைய நடத்தைகளுக்கு உதவியாகவோ உடந்தையாகவோ இருத்தல்.

#### தண்டனைகள்

சிறுகுற்றங்களுக்கான தண்டனைகள் பின்வருவனவற்றை கொண்டிருக்கும்.

கடிந்துரை, கடுங்கண்டனம், அல்லது தகவுரை ("எச்சரிக்கை" தண்டனையாகாது) ஒரு வருடத்திற்கு மேற்படாத காலப்பகுதிக்குச் சம்பள ஏற்றங்களை நிறுத்தல், குறைத்தல், அல்லது பிற்போடல். உத்தியோகத்தரின் செலவில் ஒரு ஒழுக்காற்று இட மாற்றம், ஒழுக்காற்று விசாரணைக்குப் பின் விதிக்கப்படும் அறவீடு, ஒரு கிழமை சம்பளத்திற்கு மேற்படாத பணத்தண்டம்.

பாரிய குற்றங்களுக்கான தண்டனைகள் பின்வருவனவற்றை கொண்டிருக்கும்

பதவி நீக்கம் செய்தல், சேவை முடிவுறுத்தல் (ஒழுக்காற்று விசாரணையின் பின்னர்) கட்டாய இளைப்பாறல், சேவை மூப்புக் குறைப்பு (அதாவது பணியாளர் உள்ள தரத்தில் குறித்த இடங்களைக் குறைப்பதனால்) வரிசைப் பதவிக் குறைப்பு (அதாவது அவர் சார்ந்த சேவையின் வகையில் அடுத்த மிகக் குறைந்த சம்பளத்திட்டத்திற்கு இறக்கப்படல்), ஒரு வருடத்திற்கு மேற்படாத காலத்திற்கு சம்பளத்தில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஏற்றங்களை நிறுத்தல், குறைத்தல் அல்லது பிற்போடல். குறித்த ஒரு காலப்பகுதிக்கு பதவியேற்றப் பரீட்சைகளுக்குத் தோற்றும் தகுதி நீக்குதல், பதவியேற்றத்தைக் குறிக்கப்பட்ட காலத்திற்குப் பிற்போடல் என்பனவாகும்.

இக்கட்டுரையின் நோக்கம் பணியாளர் மீதான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது ஏற்படுகின்ற காலவிரயம், நிதிவிரயம் முரண்பாடுகளை தவிர்ப்பதாகும்.

கூட்டுறவுப் பணியாளர்கள் ஒழுக்காற்று நடவடிக்கை ஒரு பரந்த விடயம் ஆகும். இக்கட்டுரை மூலம் சில முக்கிய பகுதிகளை மட்டும் குறிப்பிட்டு இதனை நிறைவு செய்கின்றேன்.

*கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் கூட்டுறவுப் பணியாளர்கள் மீதான ஒழுக்காற்று விசாரணைகள் தொடர்பான நடவடிக்கைகள் சிலவற்றை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.*

# கூட்டுறவுச் சங்கங்களில் ஒழுக்காற்று நடவடிக்கைகள்!

*வீ.கே.அருந்தவநாதன் (BA,Dip in HRD)-யாழ்.மாவட்ட கூ.அ.உ.ஆணையாளர்*

1972ம் ஆண்டு மார்ச் மாதம் 18ம் திகதிக்கு முற்பட்ட காலத்தில் கூட்டுறவுப் பணியாளர்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகள் யாவும் தொழில் பிணக்குச் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய முடிவு செய்யப்பட்டு வந்தன. ஆனால் 1972 மார்ச் 18ம் திகதிக்குப் பின்னர் அதாவது கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுச் சட்டம், துணைவிதிகளின் நடைமுறைக்கு அமைய கூட்டுறவுப் பணியாளர்களின் நியமனம், இடைநீக்கம், ஒழுக்காற்று விசாரணை ஆகியன நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

## ஒழுக்காற்று விசாரணை ஒன்றை மேற்கொள்ள வேண்டிய காரணிகள்

கூட்டுறவுப் பணியாளர்கள் புரியக்கூடிய குற்றங்கள் கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழுச் சட்ட இல.12ன் கீழான ஒழுங்கு விதிகளின் கீழ் இவ்விதிகளின் பின்னிணைப்பு III, IV ஆகிய பகுதிகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவை சாதாரண குற்றங்கள், பாரிய குற்றங்கள் என இரு பகுதிகளாக இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. கூட்டுறவுப் பணியாளர்களால் இழைக்கப்படும் குற்றங்கள் சாதாரண குற்றங்களா? அல்லது பாரிய குற்றங்களா? என நிர்ணயிப்பது மிகவும் சிக்கலான ஒரு கருமமாகும். சாதாரண குற்றமாக ஒருவருக்குத் தோன்றுவது இன்னொரு தரப்பாருக்கு பாரிய குற்றமாகவும் தோற்றப்படுமாயின் அது ஒரு குழப்ப நிலைமையை ஏற்படுத்திவிடும். எனவே குற்றங்களின் தன்மையை நோக்குமிடத்து சங்கங்கள் மிக அவதானமாக இருத்தல் வேண்டும்.

## குற்றம் இழைத்த பணியாளர் ஒருவர் சேவையில் இருக்கும்போது அவருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் நடைபெறலாமா?

குற்றம் இழைத்த பணியாளர் சேவையில் இருக்கும்போது அவருக்கு எதிரான விசாரணை நடைபெறக் கூடாது எனக் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுச் சட்டத்தில் எதுவும் கூறப்படவில்லை. ஆயினும் குறித்த பணியாளர் ஒருவரைச் சேவையில் ஈடுபடுத்தும்போது சிற்சில இடையூறுகள் ஏற்பட இடமுண்டு. ஆகவே விசேடமாக பாரிய குற்றம் இழைத்த பணியாளரை சேவையினின்று இடைநிறுத்தம் செய்தோ அல்லது கட்டாய விடுமுறையில் அனுப்பியோ ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்வது சாலச் சிறந்ததாகும். இடைநிறுத்துகையும் கட்டாய விடுமுறையில் அனுப்புவது சம்பந்தமாக கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு ஒழுங்கு விதிகள் 131அ, ஆ, 132ம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கூறிய சட்ட ஏற்பாடுகள் எவ்வாறாயினும் பணியாளர் ஒருவர் சாதாரண குற்றம் இழைத்திருந்தால் அத்தகையவரைச் சேவையில் ஈடுபடுத்திக்கொண்டு ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்வதில் தவறில்லை. குறித்த பணியாளரைச் சேவையில் ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் இடையூறுகள் ஏற்பட இடமுண்டு எனக் கூட்டுறவுச் சங்கம் கருதும் நிலையில் குறித்த பணியாளரை சேவை இடைநிறுத்தம் செய்யலாம். சாதாரண குற்றம் இழைத்த பணியாளர் ஒருவரை சேவையினின்றும் நீக்குவதற்கோ அல்லது சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்ட காலப் பகுதிக்குச் சம்பளம் வழங்காதிருக்கவோ கூட்டுறவுச் சங்கத்திற்கு உரிமை இல்லை. ஆகவே சாதாரண குற்றம் இழைக்கப்பட்ட எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சேவையிலீடுபடுத்திக் கொண்டு ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்வது சங்கத்திற்கு நன்மை பயக்கக்கூடியதாகும்.

## ஆரம்ப விசாரணை

ஒரு பணியாளருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருப்பின் அது பற்றிய ஆரம்ப விசாரணை ஒன்றை நடாத்துவது சம்பந்தமாக தகுந்த நடவடிக்கைகளை எடுப்பது இயக்குனர்/நிர்வாக சபையின் கடமையாகும். குற்றம் இழைத்த பணியாளர் சேவையில் இருக்கும்போது அல்லது அவரது சேவையை இடைநிறுத்தம் செய்த பின்னரும் ஆரம்ப விசாரணையை மேற்கொள்ளலாம். இத்தகைய விசாரணை மிக விரைவில் நடைபெறுவது உரிய நிர்வாகிகள் கவனத்திற்கு எடுத்தல் வேண்டும். இவ்வாறான ஆரம்ப விசாரணையின்போது வெளிப்படலாகும் விடயங்களை பின்வரும் மூன்று பிரிவுகளுக்குள் அடக்கலாம்.

01. பணியாளர் புரிந்துள்ள குற்றம், குற்றம் புரிந்துள்ள காலம்.
02. உரிய குற்றத்தை ஆதாரப்படுத்தக்கூடிய சாட்சிகள்.
03. மேற்கூறிய சாட்சிகள் மூலம் ஆதாரப்படுத்தக்கூடிய குற்றச்சாட்டுக்கள் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுச் சட்ட ஒழுங்கு விதிகளின் கீழாக பின்னிணைப்பு (III அல்லது IV) எப்பிரிவின் கீழ் இத்தகைய குற்றம் என்பதாகும்.

ஆரம்ப விசாரணையை மேற்கொள்ளும்போது ஆரம்ப விசாரணை உத்தியோகத்தர் முன்னிலையில் சமர்ப்பிக்கப்படும் தகவல்கள் சம்பந்தமாக அறிக்கை ஒன்று தயாரிப்பது அவசியமாகும். ஆரம்ப விசாரணை ஒன்றை மேற்கொள்ளும்போது குற்றம் இழைத்த பணியாளரையோ அல்லது அவரது பிரதிநிதியையோ அழைத்து விசாரணை செய்ய வேண்டும் என்ற நியதி இல்லை. குறித்த பணியாளரிடமிருந்து ஏதேனும் தகவல்கள் பெற வேண்டுமெனக் கண்டால் அவரை அழைத்து விசாரிப்பதில் தவறு ஒன்றும் இல்லை.

ஆரம்ப விசாரணையின் பின்னர் சகல தகவல்களும் அடங்கிய விசாரணை அறிக்கை இயக்குனர் சபைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். குற்றம் சுமத்துவதற்கு போதிய காரணிகள் இருக்கக் கண்டால் அத்தகைய குற்றங்களை ஆதாரப்படுத்தக் கூடிய சாட்சிகள், ஆவணங்கள் முதலியவற்றை அடக்கிய அறிக்கை மீது இயக்குனர்/நிர்வாக சபையினர் நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக இருக்கும். ஆரம்ப விசாரணையை மேற்கொள்வதற்கு அது தொடர்பான சட்

(4ம் பக்கம் பார்க்க)

**கூட்டுறவு..** 3ம் பக்கத் தொடர்ச்சி

டம், ஏற்பாடுகள் பிணக்குச் சம்பந்தமான விடயத்தில் சிறப்புத் தேர்ச்சியும், அனுபவமும் உடைய ஒருவரை நியமிப்பது சாலச் சிறந்தது. ஆரம்ப விசாரணை தேவைப்படும் தகவல்களைச் சேகரிக்கும் ஒரு விசாரணை ஒன்றே தவிர பணியாளர் மீதான இறுதி நடவடிக்கை எடுக்கும் விசாரணை ஒன்று அல்ல. ஆரம்ப விசாரணை ஒன்று நடைபெறுவதை தவிர்த்துக் கொள்வது விவேகமானது. ஆரம்ப விசாரணை தொடர்பாகக் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் ஒழுங்கு விதிகள் 80, 83, 84, 125 ஆகிய பிரிவுகளிலே குறிக்கப்பட்டுள்ள தனைக் கருத்தில் கொள்வது அவசியமாகும்.

## குற்றப் பத்திரம்

ஆரம்ப விசாரணை அறிக்கை இயக்குனர் சபையால் ஆராயப்பட்டு குற்றம் இழைக்கப்பட்டுள்ளமையை நிரூபிக்கக்கூடிய நிலை இருந்தால் இயக்குனர் சபை/நிர்வாக சபை குற்றப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆரம்ப விசாரணையின்போது வெளிவந்தமை சாதாரண குற்றங்களாயின் ஒழுக்காற்று விசாரணை ஒன்றினை மேற்கொண்டு நடத்தாமல், கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு ஒழுங்கு விதி 120ன் கீழ் தண்டனை வழங்கலாம். இவ்வாறான நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வது பொருத்தமற்றது என்றோ அல்லது பாரிய குற்றம் புரிந்துள்ளதாகவோ இயக்குனர்/நிர்வாக சபை கருதுமிடத்து உரிய ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்வது சிறந்தது. ஒரு பணியாளர் சேவையினின்று இடைநிறுத்தம் செய்யப்பட்டு இரு வாரங்களுக்குள் அவர் மீதான குற்றப்பத்திரம் வழங்கப்படுதல் வேண்டும். குற்றப்பத்திரங்கள் வழங்கும்போது ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் பலவிதமான முறைகளைக் கடைப்பிடிக்கின்றன. இதனால் குற்றப் பத்திரங்கள் சரிவர வழங்கப்படாத ஒரு நிலை ஏற்பட இடமுண்டு. ஒரு குற்றப்பத்திரம் பூரணத்துவம் பெறவேண்டுமாயின் பின்வரும் அம்சங்கள் அதில் இடம்பெற்றிருத்தல் வேண்டும்.

01. விசாரணையை மேற்கொள்ளும் சங்கத்தின் பெயரும், முகவரியும்.
02. குற்றம்புரிந்த பணியாளரின் பெயரும், முகவரியும்.
03. குற்றம்புரிந்த பணியாளர் வகித்த பதவி.
04. குற்றம்புரிந்த காலப்பகுதி / திகதியும், இழைத்த குற்றமும்.
05. குறிப்பிட்ட குற்றம் கூட்டுறவு சேவையாளர் ஆணைக்குழுவின் ஒழுங்கு விதிகள் (பின்னிணைப்பு III, IV) எப்பிரிவின்கீழ் குற்றமாகக் கருதப்படுகின்றது என்ற விபரம்.
06. தான் நிரபராதி என்பதற்கு விளக்கமளிப்பதற்கு குற்றம் இழைத்த பணியாளருக்கு வழங்கப்படும் கால எல்லை. (குற்றப் பத்திரம் வழங்கப்பட்டு ஆறு வாரங்களுக்குள் விளக்கமளிப்பதற்கு குற்றம் இழைத்த பணியாளருக்கு தவணை வழங்கப்படல் வேண்டுமெனக் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு ஒழுங்கு விதி 81ல் குறிப்பிடப்பட்டுள்ளது)
07. நிரபராதி என்பதற்கான விளக்கம் யாருக்கு, எந்த முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் என்பது பற்றிய விபரம்.
08. குற்றப்பத்திரத்துடன் குற்றத்தை ஆதாரப்படுத்தக்கூடிய சாட்சிகள், ஆவணங்கள் சம்பந்தப்பட்ட விபரம், (சங்கத்தின் புத்தகங்களை பரிசோதனை செய்ய விரும்பினால் அதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படல் வேண்டும். கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுச் சட்ட ஒழுங்கு விதி 86ற்கமைவாகப் புத்தகங்கள், ஆவணங்களைப் பரிசோதனை செய்து, குறிப்புக்கள் எடுக்கவோ அல்லது பிரதிகள் எடுக்கவோ குற்றம் சுமத்தப்பட்டவர் அல்லது பிரதிநிதிக்கு உரிமையுண்டு.)

குற்றப் பத்திரம் வழங்கும்போது அதனை உரிய பணியாளருக்கு நேரில் வழங்கி குற்றப்பத்திரத்தை இவர் பெற்றுக்கொண்டதை அத்தாட்சிப்படுத்தக்கூடிய வகையில் குற்றப்பத்திரப் பிரதியில் அவரது கையொப்பத்தினைப் பெற்றுக்கொள்வது நல்லது. அல்லாதுவிடின் அவரது முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

## குற்றங்கள்

### 01. பின்னிணைப்பு III

#### சிறு குற்றங்கள்

01. போதிய காரணமின்றி வேலைக்கு சமூகமளிக்காமை.
02. போதிய காரணமின்றி வேலைக்குப் பிந்தி வருதல்.
03. வேலையில் அசமந்தமும், புறக்கணிப்பும்.
04. தனது வேலை சம்பந்தமாக கொடுக்கப்பட்ட சட்டரீதியான கட்டளையை நிறைவேற்ற பணியாளர் வேண்டுமென்றே தவறுதல்.
05. வியாபார நடவடிக்கைகளுக்காக பணிகொள்வோரின் வளவிற்குள் வரும் பொது மக்களிடம் பண்பின்றி நடத்தல்.
06. பொய்ச் சுகவீனம் காட்டுதல்.
07. தனது பணிகொள்வோரின் வளவினுள் பொறுப்பாக உள்ளவரின் முன்கூட்டிய அனுமதியின்றி தனது வேலைக்குச் சம்பந்தமில்லாத கைப்பிரசுரங்கள், துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் என்பவற்றை வழங்கலும், காட்சிப்படுத்தலும்.
08. பணிகொள்வோரின் வளவினை துப்புரவாகப் பேணுதல் தொடர்பாகக் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களை மீறுதல்.
09. பணிகொள்வோரினால் வளவினுள் புகைத்தல் தடை செய்யப்பட்ட இடத்தில் புகைபிடித்தல்.

### 02. பின்னிணைப்பு IV

#### பாரிய குற்றங்கள்

01. பணிகொள்வோருக்குச் சொந்தமான அல்லது பொறுப்பிலுள்ள பண்டங்களை அல்லது பொருட்களை வேலையாளரின் நேரடியாகப் புறக்கணிப்பு, வேண்டுமென்றே செய்யும் தன்மை அல்லது மோசடி என்பன பொருந்தத்தக்க வகையில் சேதம் விளைவித்தல் அல்லது செய்தல்.
02. வேண்டுமென்றே கீழ்ப்படிவில்லாதிருத்தல் அல்லது வேண்டுமென்றே ஒழுக்காற்றை மீறல்.

(2ம் பக்கம் பார்க்க)

# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை-2011
## பயிற்சி வினாத்தாள்-5

தொகுப்பு: செல்வி மதனரூபி-பாரதிதாசன் (ஆசிரியை)

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை முன்னிட்டு கற்பகத்தில் வெளிவந்துள்ள பயிற்சி வினாத்தாளுக்குரிய விடைகளை சுயமாக கண்டறிந்து பிறிதொரு தாளில் விடைகளை எழுதி இவ்வினாத்தாளுடன் இணைத்து அடுத்த மாதம் 10ம் திகதிக்கு முன் "ஆசிரியர், கற்பகம், வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், 52, சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். சரியான விடைஎழுதுபவர்களின் பெயர் விபரங்கள் கற்பகத்தில் பிரசுரிக்கப்படும்.

## பகுதி-1

**பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையின்கீழ் கீறிடுக.**

01) ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் லக்ஷி கோயிலுக்குப் போவாள். அவள் நேற்று முன்தினம் கோயிலுக்கு சென்றிருந்தால் நாளை மறுநாள் என்ன கிழமை?

i) சனி ii) செவ்வாய் iii) ஞாயிறு iv) திங்கள்

02) ஒரு பூந்தோட்டத்தில் முதலில் ஒரு ரோசாச் செடியும் அடுத்து ஒரு மல்லிகைச் செடியும் அதற்கடுத்து ஒரு சூரியகாந்திச் செடியும் மாறி மாறி நடப்படுகின்றன. அந்த வரிசையில் 20வது செடியாக நடப்பட்டது எச்செடி?

i) மல்லிகை ii) ரோசா iii) சூரியகாந்தி iv) கூறமுடியாது

03) இலங்கையில் அதிகம் பயிரிடப்படுவது?

i) நெற்பயிர் ii) தேயிலை iii) மிளகாய் iv) தென்னை

04) இலங்கைக்கு உரிய தாவரம் ஒன்று?


i) தேயிலை ii) இறப்பர் iii) மாமரம் iv) கறுவா

05) சொற்களை மட்டுமன்றி உருவங்களுடன் செய்திகளையும் அனுப்பக்கூடிய தகவல் சாதனம்?

i) தொலைபேசி ii) மைக் iii) ரெலெக்ஸ் iv) பக்ஸ்

06) அரை டசின் பேனாவின் விலை ரூபா 72.00 ஆகும். 2 டசின் பேனாவின் விலை யாது?

i) ரூ. 72.00 ii) ரூ.144.00 iii) ரூ.288.00 iv) ரூ.36.00

07) 


இடைவெளியில் வரவேண்டிய எண் யாது?


i) 18 ii) 9 iii) 36 iv) 27

08) இயற்கை அன்னை அளித்த கொடைகளில் நீர்வளம் முக்கிய ஒன்றாகும். நீர் என்பதற்கு ஒத்தசொல் தருக?

i) திட்பம் ii) திரவம் iii) புனல் iv) பொய்கை

09) வயலில் வேலை செய்த தொழிலாளர்கள் மரநிழலில் ஓய்வாக இருந்தனர். ஓய்வு என்பதற்கு எதிர்ப்பதம் தருக

i) அமைதி ii) இளைப்பாறுதல் iii) சுறுசுறுப்பு iv) சோம்பல்

10) 


இடைவெளியில் வரவேண்டிய எண் யாது?

i) 49 ii) 36 iii) 25 iv) 98

## பகுதி-2

**கீழ்க் காணும் பந்தியை வாசித்து தரப்படும் வினாக்களுக்கு விடை தருக.**

வருடாவருடம் ஏப்ரல் மாதம் 14 அல்லது 15ம் திகதியளவில் சித்திரைப் புத்தாண்டு பிறக்கின்றது. இது தமிழர்களுக்கு மட்டுமல்ல சிங்களவர்களுக்கும் புத்தாண்டாக இருப்பது ஒரு சிறந்த அம்சமாகும். இரு இனங்களுக்குமிடையில் பல ஒற்றுமைகளுக்கு இதுவும் ஒரு சான்றாகும். புத்தாண்டு பிறந்ததும் தமிழ் மக்கள் மருத்துநீர் வைத்து நீராடிப் புத்தாடை அணிந்து கோயிலுக்குப் போய் வருவார்கள்.

பலகாரங்களோடு சேர்த்து அறுசுவை உணவுகளைப் பரிமாறிக் கொள்வார்கள். எக்கருமங்களைச் செய்தாலும் நல்ல நேரம் பார்த்தே செய்வார்கள். முக்கியமாக கைவிசேடம் வழங்குதல் சிறந்த நேரத்திலேயே இடம்பெறும். ஊறவினர் வீடுகளுக்கும் நல்ல நாள் பார்த்தே செல்வார்கள். மாணவர்களும் தமது சகபாடிகள் வீடுகளுக்கு சென்று மகிழ்வர்.

01) தமிழ்ப் புத்தாண்டு எப்போது பிறக்கும்?

02) ஏப்ரல் 14 அல்லது 15ம் திகதியில் பிறக்கும் புத்தாண்டின் சிறப்பம்சம் என்ன?

03) சிங்களவர், தமிழர்களுக்கிடையில் உள்ள ஒற்றுமைக்கு வேறு ஒரு சான்று தருக?

04) சாதாரண நாட்களில் நீராடுவதற்கும் புத்தாண்டில் நீராடுவதற்கும் உள்ள வேறுபாடு என்ன?

05) புத்தாண்டில் நல்ல நேரம் பார்த்து செய்யும் நிகழ்ச்சிகள் 2 தருக?

06) 'மருத்துநீர்' என்பதை பிரித்து எழுதுக?

07) 'உறவினர்' என்ற சொல்லுக்கு ஒத்த கருத்துச் சொல் தருக?

08) 'செய்வார்கள்' என்ற வினைமுற்று நிகழ்காலமா? எதிர்காலமா?

09) 'சகபாடிகள்' என்போர் யாவர்?

❁ கீழே தரப்படும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலப் பதத்தைத் தருக?

10) குழுத் தலைவன்-...................... 11) விளாம்பழம்-........................

❁ கீழே தரப்படும் ஆங்கில சொற்களுக்குரிய தமிழ்ப் பதத்தை தருக?

12) may I Come in-.................... 13) Be Careful-........................

❁ கீழ்வரும் தமிழ்ச்சொற்களுக்குரிய சிங்களச் சொல்லைத் தருக?

14) காகம்-.................... 15) வெள்ளை நிறம்-...................... 16) போங்கள்-....................

❁ நாவலர் ஆரம்ப பாடசாலையின் மாணவர்கள் கல்விச் சுற்றுலாவிற்குச் சென்றனர். சுற்றுலாவில் பங்குபற்றியவர்களின் தகவல் அட்டவணை ஒன்று கீழே தரப்படுகின்றது.

| தரம் | வகுப்புக்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய ஆண்கள் | பங்குபற்றிய பெண்கள் |
|---|---|---|---|
| 2 | 03 | 63 | 60 |
| 3 | 03 | 70 | 74 |
| 4 | 03 | 73 | 76 |
| 5 | 03 | 59 | 65 |

17) கல்விச் சுற்றுலாவில் பங்குபற்றிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

18) கல்விச் சுற்றுலாவில் கலந்துகொண்டவர்களில் குறைந்த தொகையினர் எத்தரத்தைச் சேர்ந்தவர்கள்?

19) தரம் 5 மாணவர்களிடம் மட்டும் ரூ.100 பெறப்பட்டது. ஏனைய அனைத்து தரத்தைச் சேர்ந்த மாணவர்களிடமும் ஒருவருக்கு ரூ.50 வீதம் பெறப்பட்டது எனின், சுற்றுலாவில் பங்குபற்றிய மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட மொத்த தொகை யாது?

20) சுற்றுலாவுக்கு பயன்படுத்திய பேருந்து ஒன்றில் 60பேர் மட்டுமே பயணம் செய்ய முடியும் எனின், எத்தனை பேருந்துகள் சுற்றுலாவுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கும்?

❁ பின்வரும் வினாக்களுக்கான மிகச்சரியான விடையை எழுதுக.

21) இந்துக்கள் சித்திரை மாதத்தில் கொண்டாடும் விழா எது?

22) சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து ஏனைய பிரதேசங்களுக்கு சென்றுவருவதற்காக திறக்கப்பட்ட வீதி எது?

23) ஒருவருடைய நன்நடத்தை சான்றிதழை எங்கே பெற்றுக்கொள்ள வேண்டும்?

24) பிரபலமான நிறுவனங்கள் தபாலகத்தில் வைத்திருக்கும் தபால்பெட்டிகளைச் சுருக்கமாக எப்படி அழைப்பர்?

25) மறுபக்கம் பார்க்க என்பதை சுருக்கமாக எப்படி எழுதுவர்?

❁ கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (✕) எனவும் அடையாளமிடுக.

26) இயல், இசை, நாடகம் என்பன முக்கலைகள் ஆகும். ( )

27) கடவுச் சீட்டுக்களை ஆட்பதிவுத் திணைக்களம் வழங்குகின்றது. ( )

28) பாடசாலை அபிவிருத்திச் சபையின் தலைவராக அதிபர் செயற்படுவார். ( )

29) ஒலிம்பிக் விளையாட்டின் பிறப்பிடம் கிரேக்கம் ஆகும். ( )

30) வெப்ப பிரதேசத்துக்குரிய உடை பருத்தி ஆகும். ( )

## வினாத்தாள் -4 விடைகள்

**பகுதி 1**

| | |
|---|---|
| 1) i | 6) iv |
| 2) ii | 7) i |
| 3) iv | 8) ii |
| 4) iii | 9) i |
| 5) ii | 10) ii |

**பகுதி 2**

1) அழகுடையவை.
2) கேட்போர் உள்ளம்.
3) சிவப்பு
4) கிளி
5) கிடைத்த உணவை பகிர்ந்து உண்ணும்
6) காகம், கிளி
7) தேன் உண்ண
8) அழைத்தல்
9) PARROT
10) FRUIT
11) தேனீ
12) காகம்
13) மாமா-මාමා
14) துவ - දුව
15) சீயா - සීයා
16) 52×5=ரூ.260
17) 5×400=ரூ.2000
18) 20×90=ரூ.1800
19) 30×75=ரூ.2250
20) 25×90=ரூ.2250
21) திருக்குறள்
22) மகிந்த ராஜபக்ஷ
23) ரூ. 30.00
24) வெசாக்
25) சிவப்பு, மஞ்சள், பச்சை
26) (✓)
27) (✕)
28) (✓)
29) (✕)
30) (✓)

❁ கற்பகத்தில் பிரசுரமாகும் இவ் ஆண்டுக்கான 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள் இம்மாதத்துடன் (ஜூலை) நிறைவடைகிறது. எனவே இவ்வாண்டு ஒகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் அனைத்து மாணவர்களும் சிறந்த பெறுபேற்றைப் பெற்று பரீட்சையில் வெற்றியடைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். -ஆசிரியை-

சென்ற இதழ் தொடர்ச்சி

# பனை வளத்தின் 7 அபிவிருத்திக்கு வழி பிறக்குமா?




**பேராசிரியர் கு.மிகுந்தன்**
தலைவர், விவசாய உயிரியல்துறை,
விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்


### கலைப் பொருட்களில் புதுமைகளை உள்வாங்குதல்

கற்பகதருவிலிருந்து பெறக் கூடிய தாவரப் பாகங்களிலிருந்து கலைநயம்மிக்க பொருட்களை உருவாக்குதலில் பயிற்சிகளை வழங்குதல், இன்னும் இப்பொருட் களிலிருந்து விதம்விதமான பொரு ட்களை உருவாக்க வழி செய்யும். இதில் கணினித் தொழில்நுட்ப முறையில் பொருட்களை வடிவ மைத்தல், சித்திரமும் வடிவமைப் பும் எனும் கற்கை நெறியினையும் உள்வாங்கலாம். அழகுப் பொரு ட்கள், ஓவியங்கள் இன்னும் விதம் விதமான பொருட்களை ஞாபகச் சின்னங்கள் எனப் பலவிதமான பொருட்களை உருவாக்க இதனை சிறந்த குடிசைக் கைத்தொழிலாக மாற்றியமைக்கலாம்.

போரினால் கணவனை யிழந்து நிர்க்கதியாயிருக்கும் வித வைகளின் குடும்பங்கள், பெண் களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் இவற்றுடன் அவயவங்களை இழந்து வாழ்க் கையே கேள்விக்குறியாகியிருக் கும் எங்களின் உறவுகளுக்கு அவ ர்களின் மன உளைச்சலைப் போக் கிடவும், சுயவருமானம் ஈட்டும். எமது பிரதேசத்தினது அபிவிருத் தியில் வெளியாரும் பெரும் நிறுவ னங்களும் எமது வளங்களை உறி ஞ்சி இலாபம்பெறும் வாய்ப்புக் களைத் தவிர்த்து இங்குள்ள வளங் களைத் தெரிவு செய்து பேணிப் பாதுகாக்கும் அதேவேளையில் இங்குள்ள வளங்கள் நொந்து போன இங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பையும், வருமானத் தையும் ஈட்டித்தருவதுடன் சொத் துக்களையும் சொந்தங்களையும் இழந்து வழிதேடிக் கொண்டிருக் கும் குடும்பங்களின் வாழ்வாதா ரத்தை மேம்படுத்துவதாகவும் இரு க்க வேண்டுமென்பதே அனைவரி னதும் எதிர்பார்ப்பாகும். இந்த வகையிலே இப்போது நடை பெற்றுவரும் அபிவிருத்தியின் பாதையை வடிவமைக்கும் கருத் தரங்குகளில் இது சார்ந்த புல மையாளர்களினதும் மக்களினதும் விருப்புக்களும் செவிமடுக்கப்பட்டு அனைவரும் ஏற்றுக்கொள்ளும் திட்டங்களாகத் தீட்டப்பட்டுச் செய ற்படுத்தப்பட வேண்டும். இது கால த்தின் கட்டாயமும்கூட.

### கற்பகதருவினை வளம்படுத்தும் கைத்தொழில்

வடபகுதியின் வளங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்தும் அதேவேளையில் இவ்வளங்களை அடிப்படையாகக் கொண்ட விவசா யக் கைத்தொழில் முயற்சிகள் மேன்மேலும் ஊக்குவிக்கப்பட வேண்டும். இவ்வாறான கைத் தொழிலின் பெருக்கம் வேலை வாய்ப்புக்களை விரைந்து உருவா க்குவதுடன் இத்தொழில் முயற்சி களில் ஈடுபடும் இளைஞர் சமூகத் திற்குத் தேவையான தன்னம்பிக் கையையும் கொடுக்கும். இளை யோரின் பலத்தையும் தொழிலில் ஈடுபடும் திறனையும் விருத்தி செய் யும். கைத்தொழில் விருத்திக்கு அத்திவாரமிடவேண்டிய நேரமிது. இனியும் வேலை வாய்ப்புத் தேடி எங்களுறவுகள் புலம்பெயர்ந்து செல்வதைத் தடுத்து நிறுத்தும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் அவர்களுக்கான வேலைவாய்ப்பும், தனிநபர் வருமான அதிகரிப்பும் முக்கியமானவை. பல்துறைசார் விற்பன்னர்களின் ஆளுமைக்குள் கைத்தொழில் விருத்தி சாத்தியமா னதே.

### பனைவளம்சார் கற்கைநெறியின் அவசியம்

பனை வளத்தைப் பற்றிய மேலதிக அறிவுக்கு இது சார்ந்த கற்கைநெறிகளின் அவசியத்தைப் புலமையாளர்கள் பரிந்துரைத்துள் ளனர். ஆங்காங்கே உதிரிகளாகப் பாட அலகுகளுள் சேர்க்கப்பட்டி ருப்பினும் இதனது வளத்தினை முழுமையாக விருத்தி செய்வத ற்கான கற்கைகள் என எதையுமே குறிப்பிட்டுக் கூறுவதற்கில்லை. பனை தொடர்பான சான்றிதழ்க் கற்கைநெறி யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தில் ஒரு தடவை வழங்கப்பட்டது. இது தவிர ஊவா வெலஸ்ஸ பல்கலைக்கழகத்தில் "பனையினத் தாவரம் மற்றும் இறப் பர் பால் தொழில்நுட்பமும் பெறு மதி சேர்ப்பும்" என்னும் பட்டப் பயில்நெறி அறிமுகப்படுத்தப்பட் டுள்ளது. இதேபோன்று பனை வளத்தை முழுமையாகக் கொண்ட வடபகுதிக்கான பல்கலைக்கழக மாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழ கம் இருப்பதால் பனை, தென்னை, கமுகு இவ ற்றுடன் அழ குக்காக வளர்க்கப்படும் பனை யினத்தவ ரங்களை உள்ளடக் கியதான டிப்ளோமா பட்டப் பயில் நெறி ஆரம்பிக்க வேண்டிய தன் தேவையினைப் புலமை யாளர்கள் முன்மொழிந்துள்ளனர்.

பனை வளம்சார்ந்த பூரண அறிவைப் பெற்றுக்கொள்ள வேண் டுமானால் இது தொடர்பான கற் கைநெறியை விரிவாக மேற்கொள்ள வேண்டும்.

இந்தக் கற்கை நெறியினூ டாக உள்வாங்கப்படும் மாணவர்கள் பனையினத் தாவரங்கள் பற்றி விளக் கமாகக் கற்றுக்கொள்வதற்கும் இது பற்றிய ஆய்வுகளை முன்னெடுப் பதற்கும் இவற்றினூடாக இவ் வளத் தினை மேம்படுத்துவதற்கும் வாய்ப் புக்கள் உண்டென எதிர்பார்க்கப்படு கின்றது. பனை வளத்தினது பிரயோ கங்களென எமது மூதாதையரினால் இனங்காணப்பட்டவை தவிர அதன் பயன்களை மதிப்பேற்றஞ்செய்து புதிய பொருட்களாக அனைவரும் விரும்பி வாங்கிப் பயன்படுத்தும் பொருட்களாக மாற்றும் சந்தர்ப்பத் திலேயே எங்களூர் வளமான கற்பக தருவினாலான பயன்பாட்டின் விரு த்தி சாத்தியமாகும். எமது கையி லேயே இப்படியொரு வளத்தை வைத்துக்கொண்டு வேலைவாய்ப் பைத் தேடியலையும் நிலைமையை இனியும் வரவிடாது இவ்வளம் பற் றிய அறிவுத் தேடலுக்குள் எமது இனிய இளையவர் சமூகத்தை உள் வாங்கிக் கல்வியுடனான அபிவிருத் திக்கு வழி செய்ய வேண்டியது எல் லோருடைய கடமையுமாகும். விஞ் ஞானபீட தாவரவியல் துறையில் கடமையாற்றிய கலாநிதி தெய்வேந் திரராசா, பேராசிரியர் கந்தையா ஆகியோரும், விவசாய பீடத்தில் பணிபுரிந்த பேராசிரியர் மோகன தாஸ் போன்றோரும் பனைசார் ஆய் வில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

(வளரும்)

## சமாச மட்ட கூட்டுறவுதின போட்டிகள் ஆரம்பம்!

89வது சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு சமாசத்தால் சமாச மட்டத்தில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த போட்டிகள் 05-08-2011 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் சமாசத் தலைவர் த.சிவலிங்கம் தலைமையில் ஆரம் பமாகியது.

இப்போட்டிகளில் அங்கத் துவ சங்கங்களைச் சேர்ந்த உறுப் பினர்கள், பணியாளர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள் மற்றும் முன் பள்ளி மாணவர்கள் ஆகியோ ருக்கான கவிதை, கட்டுரை, பேச்சு, குழு நடனம், திருக்குறள் மனனப் போட்டி என்பன நடைபெறுகின்றன.

இப்போட்டிகளுக்கு நடுவர்களாக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கணேஸ், மாவட்ட கூட்டுறவுச் சபை செயலாளர் திருமதி செல்வரத்தினம் மற்றும் தலைமைக்கரியாலய கூட்டு றவுப் பரிசோதகர் இ.விஜயமோகன ராஜா ஆகியோர் கடமையாற்றுகின் றனர்.

## நெடுந்தீவு சங்கத்திற்கு நியம நெறியாளர்குழு!

நெடுந்தீவு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டறவுச் சங்கத்தின் செயற்பாடுகளை சீரமை க்கும் நோக்குடன் நியம நெறியாளர் குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளதாக வும், சங்கத்தின் தற்போதைய சீரற்ற நிலையை கருத்தில் கொண்டு ஊர் காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளர் க.ஜெய பாலனை இச்சங்கத்தின் பகுதிப் பொதுமுகாமையாளராக நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது.

## ஊவா பல்கலை. மாணவர்கள் யாழ்ப்பாணம் வருகை!

ஊவா மாகாணத்தில் அமை ந்துள்ள பல்கலைக்கழகத்தைச் சேர் ந்த சுமார் 60 மாணவர்கள் யாழ். மாவட்டத்துக்கு வருகைதரவுள்ள தாக பனை அபிவிருத்திச் சபை பொதுமுகாமையாளர் தெரிவித் துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பனைசார் உப உணவு உற்பத்தியில் ஈடுபடும் சங்கங்களுக்கு வருகை தந்து உப உணவு உற்பத்தி சம்பந்தமாக இங் குள்ள நிலைமைகள் தொடர்பாக அறிந்துகொள்ளவுள்ளதாகவும்அவர் மேலும் தெரிவித்தார்.

**சமாசம்.....** 1ம் பக்கத் தொடர்ச்சி

அந்தந்த நிறுவனங்களுக்கு நேரில் சென்று கேள்விக்கொத்து ஒன்றின் மூலம் இத்தெரிவு இடம் பெறவுள்ளது.

இப்போட்டி சம்பந்தமாக சங்கங்களுக்கும் கொத்தணிக ளுக்கும் ஏற்கனவே சமாசத் தால் அறிவித்தல் கொடுக்கப் பட்டுள்ளது.

**கோண்டாவில்.....**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்கள் பணியாளர்களுக் கிடையேயான பொதுஅறிவு, மற்றும் தெரிவுப் போட்டிகளை யும் உறுப்பினர்கள், பணியாளர் கள், முன்பள்ளி ஆசிரியர்களுக் கிடையிலான வினாடி-வினாப் போட்டி, மகளிர் உறுப்பினர்கள், முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இடையிலான கோலம் போடுதல் போட்டி, உறுப்பினர்கள், பணியா ளர்களுக்கிடையிலான கயிறி ழுத்தல், மற்றும் ஓட்டப்போட்டி களும், உறுப்பினர்களுக்கிடை யிலான பனை மரம் ஏறும் போட் டியும், முன்பள்ளி மாணவர்களுக் கிடையிலான திருக்குறள் மன னப் போட்டி, குழு நடனப் போட்டி யையும் நடத்துகின்றது.


கூட்டுறவு வரலாற்றில் பல்வேறு வகையான கூட்டுறவு அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்ற போதிலும் எமது பனை தென்னை வள அபிவிருத்தி அமைப்புக்களே தமது பாரிய பணிகள்மூலம் உறுப்பினர்களுக்கும் அவர்சார்ந்தோருக்குமான வரலாற்று கடமைகளை ஆற்றி வருகின்றன. அந்த வகையில் நாமும் ஓர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் என்ற வகையில் பெருமைகொள்கின்றோம்.

**அந்த வகையில் நாம் மதுபான உற்பத்தியில் மட்டும் தங்கியிருக்காது, பல்வேறு உற்பத்தி மற்றும் சேவைகளை ஆற்றி வருகின்றோம்.**

**உற்பத்திகள்!**
பதநீர் உற்பத்தி
வெல்ல உற்பத்தி
பாணி உற்பத்தி
வினாகிரி உற்பத்தி

**நல சேவைகள்!**
அங்கத்தவர் நலத்திட்டம்
அங்கத்தவர் ஓய்வூதியம்
அங்கத்தவர் கல்வி
கடன் சேவை

**சமூக அபிவிருத்தி!**
முன்பள்ளிச் சேவை
சித்தமருத்துவ சேவை
சத்துணவுத் திட்டம்
புலமைப்பரிசில் நிதியம்

**மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)**
**பிரதான வீதி, மானிப்பாய்.** தொ.பே: 021 225 5109


இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு, இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2011ம் ஆண்டு ஜூலை மாதம் வெளியிடப்பட்டது.